# இந்தியாவின் பேரரசர்கள்

நூலாசிரியர்: சிவாணி. ஆ. ச.

## 1. வீரபாண்டிய கட்டபொம்மன்: தாய்நாட்டை காத்த வீர மகனின் வீர கதை

**முன்னுரை:**

தமிழ் புராணங்கள் மற்றும் காவியக் கதைகளைப் படித்தாலோ, அல்லது வீரம் பற்றிப் பேசினாலோ, சட்டென்று நினைவுக்கு வருபவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்படுபவர், வீரபாண்டிய கட்டபொம்மன். 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்றும், 'கட்டபொம்ம நாயக்கர்' என்றும் அழைக்கப்படும் இவர், இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆறு தசாப்தங்கள் முன்பே, இந்திய மண்ணில் ஆங்கிலேயர்களைத் துணிச்சலாக எதிர்த்தவர். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சித் தலைமை உரிமையை ஏற்க மறுத்து, தனது இறுதி மூச்சு வரை, ஆங்கிலேயர்களை அசாதாரண தைரியத்தால், வீறு கொண்டு எதிர்த்த 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன். வெள்ளையர்களுக்கு எமனாய் திகழ்ந்த வீரத்தின் விளைநிலம் தான் வீரபாண்டிய கட்டபொம்மன்.

**பிறப்பு:**

பொம்மு மற்றும் ஆதி கட்டபொம்மன் வம்சா வழியில் வந்தவர்கள் ஜெகவீர கட்டபொம்மன் மற்றும் ஆறுமுகத்தம்மாள் தம்பதியர். பாஞ்சாலங்குறிச்சியின் மன்னரான ஜெகவீர கட்டபொம்மன்,

*திக்குவிசய கட்டபொம்மன் என்றும் அழைக்கப்பட்டார். இத்தம்பதியருக்கு மகனாக ஜனவரி மாதம் 3 ஆம் தேதி, 1760 ஆம் ஆண்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தார். இவரது இயற்பெயர் 'வீரபாண்டியன்' என்பதாகும். கட்டபொம்மன் என்பது இவரது வம்சாவழியைக் குறிக்கும் அடைமொழியாகும்.*

**கட்டபொம்மன் பெயர் காரணம்:**

*அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரில் (இன்றைய ஒட்டபிடாரம்) ஆட்சிபுரிந்து வந்த ஜெகவீரபாண்டியனின் (நாயக்க வம்சம்) அவையில் பொம்மு என்கிற கெட்டி பொம்மு இடம்பெற்றிருந்தார். இவரது பூர்வீகம் ஆந்திர மாநிலம், பெல்லாரி மாவட்டம், வாடிக்கோட்டை ஆகும். வீர மிகுந்தவர் என்ற பொருளை உணர்த்தும் கெட்டி பொம்மு எனும் சொல் தான் நாளடைவில் கட்டபொம்மு என்று மாறி, பின் தமிழில் கட்டபொம்மன் என்ற சொல்லாயிற்று. ஜெகவீரபாண்டியனின் மறைவிற்குப்பின் அரசகட்டிலில் ஏறிய கட்டபொம்மு பின், ஆதி கட்டபொம்மன் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவரே பொம்மு மரபினரின் முதல் கட்டபொம்மன் ஆவார். இந்த பொம்மு மரபில் வந்தவர்களே ஜெகவீர கட்டபொம்மன், ஆறுமுகத்தம்மாள் தம்பதியர்.*

**கட்டபொம்மனின் தனிப்பட்ட வாழ்க்கை:**

*வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள், ஐந்து குழந்தைகளுள் ஒருவராகப் பிறந்தார். அவருக்கு ஊமைத்துரை (குமாரசாமி என்றும் அழைக்கப்பட்டார்), துரைச்சிங்கம் என்ற இரு சகோதரர்களும், ஈசுவர வடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும் இருந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின்னர், கட்டபொம்மன் அவர்கள், வீரசக்கம்மாள்*

என்பவரை மணமுடித்தார். அவருக்கு முப்பது வயதாகும் வரை, அவரது தந்தை ஜெகவீர கட்டபொம்மன் அவர்கள், பாளையக்காரராக இருந்து வந்ததால், தந்தைக்கு உதவியாக இருந்தார், கட்டபொம்மன். பின்னர், பிப்ரவரி 2ஆம் தேதி, 1790 ஆம் ஆண்டில், 47 வது பாளையக்காரராக அரியணைப் பொறுப்பை ஏற்றார். இவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லை. இவர் 9 ஆண்டுகள், 8 மாதம், 14 நாட்கள் அரசுப் பொறுப்பிலிருந்தார்.

**ஆங்கிலேயர்களை எதிர்த்த வீரனாக:**

வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் அரியணை பொறுப்பை ஏற்ற அதே சமயத்தில், ஆங்கிலேயர்கள் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவில் தொடங்கினர்.

கர்நாடக பிரதேசத்தின் ஆட்சியாளர்களான ஆற்காடு நவாப்புகள் பாளையக்காரர்களிடம் வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனியாரிடம் ஒப்படைத்தவுடன், கம்பெனியின் நேரடி ஆட்சி திருநெல்வேலியிலும் உருவானது. இதனால், திருநெல்வேலியை சுற்றியுள்ள அனைத்து பாளையக்காரர்களிடம் வரி வசூலிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட ஆங்கிலேயர்கள், அதற்காக ஆங்கிலேய நிர்வாகிகளாகக் கலெக்டர்களை நியமித்தனர்.

இதற்கு பெரும்பாலானப் பாளையக்காரர்கள் ஒத்து வராமல், தடைக் கற்களாக இருந்ததால், அவர்களை ஒழிக்க எண்ணிய ஆங்கிலேயர்கள், பாளையக்காரர்களில் ஒருவருக்கு மற்றவர் எதிரிகளாக்கும் பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்டனர்.

ஆங்கிலேயர்களுக்கு பயந்த, வரி செலுத்தியவர்களுக்கு பல சலுகைகள் தந்தனர். அவர்களை எதிர்த்தவர்களுக்கு அதிக வரி விதித்து, தண்டனையும் வழங்கினர்.
நெல்லை சீமையில் வரிவசூலிக்கும் பொ கட்டபொம்மனிடறுப்பை ஏற்றிருந்த ஆங்கிலேய தளபதி மாக்ஸ்வெல் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் கட்டபொம்மனிடம் வரிவசூலிக்க முடியாமல் இருந்தார். இதனடிப்படையில் கி.பி. 1797 இல் முதன் முதலாக ஆங்கிலேய தளபதி ஆலன் துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குப் பெரும்படையுடன் போரிட வந்தார். 1797 - 1798 இல் நடந்த முதல் போரில் கோட்டையைத் தகர்க்க முடியாமல் வீரபாண்டிய கட்டபொம்மனிடம் ஆலன் துரை தோற்று ஓடினார்.

அதன் பின்னர் நெல்லை மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் துரை வீரபாண்டிய கட்டபொம்மனைச் சந்திக்க அழைத்தார். கட்டபொம்மனை அவமானப்படுத்த நினைத்து வேண்டுமென்றே பல இடங்களுக்கு வரச்சொல்லி சந்திக்காமல் அலைக்கழித்தார். இறுதியில் செப்டம்பர் 10, 1798 இல் இராமநாதபுரத்தில் சந்தித்தார். அப்போது தந்திரத்தால் வீரபாண்டிய கட்டபொம்மனைக் கைது செய்ய முயன்றார். அதை முறியடித்து வீரபாண்டியக் கட்டபொம்மன் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சியை வந்தடைந்தார்.

**போர் மற்றும் கைது:**
வீரபாண்டிய கட்டபொம்மனது வீரமும், விவேகமும் சுற்றியுள்ள அனைத்துப் பாளையக்காரர்களிடம் புகழாய்ப் பரவி, அவர்கள் மனதிலும் வீரத்தை விதைத்தது. ஜாக்சன் துரைக்குப் பின்னர்,

லூஷிங்டன் என்பவர் கலெக்டராகப் பதவியேற்றார். ஆங்கிலேய ஆதிக்கத்தில், ஆங்கிலேயர்களுக்கு பேரிடைஞ்சலாகக் கருதப்பட்ட மைசூர் மன்னரான திப்பு சுல்தான் அவர்களை மே மாதம் 1799 ஆம் ஆண்டில், பீரங்கிகுக்குப் பலி கொடுத்தப் பின்னர், ஆங்கிலேயர்களின் இலக்குக் கட்டபொம்மனாக இருந்தது. அவருக்கும் பிரித்தானிய அரசு நிர்வாகிகளுக்கும் முரண்பாடு அதிகரித்ததால், செப்டம்பர் 1 ஆம் தேதி, 1799 ஆம் ஆண்டில், பானர்மென் என்பவர் தலைமையில் ஆங்கிலேயப் படை பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுத்தது. போருக்கு ஆயத்தமாகாமல் இருந்த போதிலும், கட்டபொம்மன் அவர்கள், ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கடுமையாக போராடினார். இந்தப் போரில், கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியதால், கட்டபொம்மன் புதுக்கோட்டை மன்னனிடம் அடைக்கலம் கோரினார். ஆங்கிலேயர்களுக்கு பயந்து, அவரைப் புதுக்கோட்டை மன்னன் காட்டி கொடுத்ததால், ஆங்கில நிர்வாகிகள் அவரைக் கைது செய்தனர்.

**இறக்கும் வரை வீரனாக வாழ்ந்த கட்டபொம்மன்:**

மரத்தடியில் விசாரணை நடத்தி கட்டபொம்மனை குற்றவாளி என்றனர் வெள்ளையர்கள். தன் மீது சுமத்தப்பட்ட "குற்றங்களை' கட்டபொம்மன் மறுக்கவில்லை. உயிர்ப்பிச்சை கேட்கவுமில்லை. இறக்கும் தருவாயிலும் கம்பீரத்தோடு "எனது தாய் மண்ணைக் காப்பதற்காக, ஆங்கிலேயர்களுக்கு எதிராக பாளையக்காரர்களைத் திரட்டினேன், போர் நடத்தினேன்" என்று வீரமுழகாமிட்டமாறு தூக்குமேடையேறினார் கட்டபொம்மன்.

*தூக்கு மேடை ஏறிய போதும், அவரது பேச்சில் வீரமும், தைரியமும் நிறைந்திருந்தது. இது சுற்றி நின்ற அனைவரின் மனதிலும் பெருமிதத்தை உருவாக்கியது. தூக்குமேடை ஏறியபோது, "இப்படிச் சாவதைவிட பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் பாதுகாப்பதற்காகப் போரிட்டுச் செத்திருக்கலாம்' என்று கட்டபொம்மன் மனம் நொந்து கூறினார்.*

***இறப்பு:***

*வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள், ஆங்கிலேயத் தளபதி பேனர்மேன் உத்தரவின் படி, அக்டோபர் 19ஆம் தேதி, 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.*

***மீண்டும் எழுந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை:***

*கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதோடு பாஞ்சாலக் குறிச்சியின் வரலாறு முடிந்து விடவில்லை. ஆங்கிலேயர்களால் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரை பிப்ரவரி 02, 1801இல் பாஞ்சாலக் குறிச்சி வீரர்களால் மீட்கப்பட்டார். பாஞ்சாலக் குறிச்சிக் கோட்டைக்குப் புத்துயிர் கிடைத்தது. ஊமைத்துரையைக் கைது செய்ய வந்த மேஜர் மெக்காலே கோட்டையினுள் செல்ல முடியாமல் திரும்பினார்.*

*அவர் தலைமையில் ஒரு பெரும்படை மார்ச் 30, 1801இல் கோட்டையை முற்றுகையிட ஆரம்பித்து, மே 24, 1801இல் அதனைக் கைப்பற்றியது. அங்கிருந்து தப்பித்து, காளையார் கோவில், விருப்பாச்சி, திண்டுக்கல், பிரான்மலை என்று ஓடிய ஊமைத்துரையையும் அவர் தம்பி*

*துரைசிங்கத்தையும் கைது செய்து, பாஞ்சாலங்குறிச்சி பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டனர் ஆங்கிலேயர். பாஞ்சாலங்குறிச்சி என்கிற பெயரையே தமிழகத்தின் வரைபடத்திலிருந்து நீக்கினர் வெள்ளையர். கோட்டை முற்றிலும் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது.*

***நினைவு சின்னங்களும், மரியாதைகளும்:***

*வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் வீரம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்திருந்ததால், அவரது வாழ்க்கை வரலாறை, பலரும் நாடகங்களாகவும், திரைப்படமாகவும் எடுத்தனர். மேலும், கட்டபொம்மனின் நினைவை போற்றும் வகையில் பல நினைவுச்சின்னங்களை இந்திய அரசு எழுப்பி வருகிறது.*

*கயத்தாறில் கட்டபொம்மன் அவர்களின் நினைவிடம் உள்ளது. கட்டபொம்மன் அவர்களின் வாழ்க்கை வரலாறு பல்வேறு தமிழ் புராணங்கள் மற்றும் காவியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன.*

*1974 ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் பழங்காலத்துக் கோட்டையின் வடிவினை ஒத்த ஒரு கோட்டையினை அப்போதைய தமிழக முதல்வராக இருந்த மு. கருணாநிதி எழுப்புவித்தார். அது இன்றளவும் வீரபாண்டியனின் புகழ்பாடி நிற்கிறது. கோட்டை, கொத்தளம், கொலுமண்டபம், ஜக்கம்மா தேவி ஆலயம் அனைத்தும் மீண்டும் தோன்றின. மண்டபத்தின் உள்ளே கட்டபொம்மனின் வீர வரலாறு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.*

கட்டபொம்மன் பயன்படுத்திய ஆயுதங்கள், அவர் காலத்து மக்கள் பயன்படுத்திய பல்வேறு பொருட்கள், அணிகலன்கள் நாணயங்கள் போன்றவை தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டெடுக்கப்பட்டுச் சென்னையில் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவர் தூக்கிலிடப்பட்ட இடமான திருநெல்வேலிக்கு அருகேயுள்ள கயத்தாறில், அதாவது இன்றைய NH7 இல், கட்டபொம்மன் அவர்களுக்கு மற்றுமொரு நினைவுச்சின்னம் இருக்கிறது. அவரது வீரத்தை போற்றும் விதமாகவும், நினைவுக் கூறும் விதமாகவும் தமிழ்நாட்டில் உள்ள வெலிங்டனில் ஒரு சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

கட்டபொம்மன் அவர்களை கௌரவிக்கும் விதமாக, அவர் தூக்கிலிடப்பட்டு இரு நூறாம் ஆண்டு விழாவின் நினைவாக அக்டோபர் 16, 1799 ஆம் ஆண்டில், இந்திய அரசு ஒரு தபால் முத்திரையை வெளியிட்டது. இந்தியாவின் முதன்மையான தொடர்பு நரம்பு மையமாகக் கருதப்படும் விஜயனாரயனத்தில் அமைந்துள்ள இந்திய கடற்படைக்கு 'ஐஎன்எஸ் கட்டபொம்மன்' என பெயரிடப்பட்டது.

மாவட்ட நிர்வாகம் அவரது ஆண்டுவிழாவை, பாஞ்சாலங்குறிச்சியில் `வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவாக' கொண்டாடுகிறது.

**முடிவுரை:**

அன்னிய படையெடுப்பாளர்களை எதிர்த்துப் பல வீரமிக்க மாவீரர்கள் தாய்நாட்டிற்காக போரிட்டு, தங்கள் இன்னுயிரை ஈந்த தால்தான், நம் தாய்நாடு "வீர பூமி" என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட வீரர்களில் ஒருவராக, ஆங்கிலேயர் ஆட்சியின் ஏகாதிபத்தியத்தை ஆரம்ப காலத்திலேயே உணர்வு பூர்வமாக எதிர்த்து, போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத்தையும், தியாகத்தையும் யாராலும் மறக்க முடியாது.

அவர் மறைந்து 222 வருடங்கள் முடிந்து விட்டது அண்ணல் அவர் இன்றும் தமிழக மக்களின் இதயத்திலும் நினைவிலும்  வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்னும் பல நூறு ஆண்டுகள் ஆன பின்னும், எங்கெங்கு விடுதலை முழக்கம் உச்சரிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைக்கப்பட்டுவார்.

ஆம்! அவரின் வீரத்திற்கு மரணமில்லை!

# *2. மகாராணா பிரதாப்: அடக்கமுடியாத தைரியம் மற்றும் தாய் நாட்டின் மீதான பற்றின் நித்திய கதை*

***முன்னுரை:***

*மேவார் மன்னன் மகாராணா பிரதாப் சிங்கின் பெயர் யாருக்குத் தெரியாது? வடமேற்கு இந்தியாவில் உள்ள ராஜஸ்தானின் மேவார் பகுதியை ஆண்ட மன்னனான இவர், ஒரு புகழ்பெற்ற ராஜபுத்திர போர்வீரன். இவர் முகலாய ஆட்சியாளர் அக்பரை எதிர்த்துப் போராடியதற்காக அங்கீகரிக்கப்பட்டவர். மற்ற ராஜபுத்திர ஆட்சியாளர்களைப் போலல்லாமல், மகாராணா பிரதாப் பலமுறை முகலாயர்களுக்கு அடிபணிய மறுத்து, தனது கடைசி மூச்சு வரை தைரியமாகப் போராடினார். ராஜபுத்திர வீரம், விடாமுயற்சி மற்றும் வீரத்தின் சின்னமாக, முகலாயப் பேரரசரான அக்பரின் வலிமையை எதிர்த்த ஒரே ராஜபுத்திரப் போர்வீரன் மகாராணா பிரதாப்.*

***பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம்:***

*மகாராணா பிரதாப் 1540 ஆம் ஆண்டு , மே மாதம், 9ஆம் தேதி, கும்பால்கர் என்ற இடத்தில், உதய்சிங் II மற்றும் சன்கார மகாராணி ஜவந்தபாய் ஆவார்களுக்கு பிறந்தார். மேவாரின் ராணா உதய் சிங்குக்கு 33 குழந்தைகள். அவர்களில் மூத்தவர் பிரதாப் சிங்.*

*ராஜபுத்திரர்களின் சூர்யவன்ஷி குல மரபில் சிசோதியா என்கின்ற பிரிவை சார்ந்தவர் இவர். சுயமரியாதை மற்றும் நல்லொழுக்கமான நடத்தை ஆகியவை பிரதாப் சிங்கின் முக்கிய குணங்கள். மகாராணா பிரதாப் சிறுவயதிலிருந்தே தைரியமாகவும் துணிச்சலாகவும் இருந்தார். பொதுக் கல்வியைக் காட்டிலும் விளையாட்டு மற்றும் ஆயுதங்களைப்*

பயன்படுத்தக் கற்றுக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டினார் மகாராணா பிரதாப்.

**மகாராணா பிரதாப்பின் முடிசூட்டு விழா:**

மகாராணா பிரதாப் சிங் காலத்தில், அக்பர் டெல்லியில் முகலாய ஆட்சியாளராக இருந்தார். இந்து மன்னர்களின் பலத்தைப் பயன்படுத்தி மற்ற இந்திய மன்னர்களை தனது கட்டுப்பாட்டிற்க்குள் கொண்டு வருவதே அவரது கொள்கையாக இருந்தது. பல ராஜபுத்திர மன்னர்கள், தங்களின் புகழ்பெற்ற மரபுகளையும், சண்டை மனப்பான்மையையும் கைவிட்டு, அக்பரிடமிருந்து வெகுமதிகளையும் மரியாதையையும் பெறுவதற்காக தங்கள் மகள்கள் மற்றும் மருமகள்களை அக்பரின் அரண்மனைக்கு அனுப்பினர். உதாவாக்கரையாக இருந்த உதய் சிங், இறப்பதற்கு முன், அவரை போல குணமுடைய அவரது இளைய மனைவியின் மகன் ஜக்மல்லை வாரிசாக நியமித்தார். பிரதாப் சிங் ஜக்ம்மலுக்கு மூத்தவராக இருந்தாலும், தனது உரிமைகளை விட்டுக் கொடுத்து மேவாரிலிருந்து வெளியேறத் தயாராக இருந்தார். ஆனால், தலைவர்கள் அவர்களின் அரசரின் முடிவை ஒப்புக்கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி, ஒரு தலைவனுக்கும் அரசனுக்கும் அவசியமான தைரியம், சுயமரியாதை போன்ற குணங்கள் ஜக்மலிடம் இல்லை என்பது அவர்களின் கருத்து.

எனவே ஜகம்மாள் அரியணையை தியாகம் செய்ய வேண்டும் என்று கூட்டாக முடிவு செய்யப்பட்டது. மகாராணா பிரதாப் தலைவர்கள் மற்றும் மக்களின் விருப்பத்திற்கு உரிய மரியாதை அளித்து மேவார் மக்களை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

## *'தாய் நாட்டை' விடுவிக்க மகாராணா பிரதாப்பின் உடைக்க முடியாத சபதம்*

*மகாராணா பிரதாப்பின் எதிரிகள் மேவாரை அதன் அனைத்து எல்லைகளிலும் சுற்றி வளைத்திருந்தனர். மகாராணா பிரதாப்பின் இரு சகோதரர்களான சக்தி சிங் மற்றும் ஜக்மல் அக்பருடன் இணைந்தனர். முதல் பிரச்சனை என்னவென்றால், நேருக்கு நேர் போரை நடத்துவதற்கு போதுமான வீரர்களை சேகரிப்பது. அதற்கு பெரும் பணம் தேவைப்படும். ஆனால், மஹாராணா பிரதாப்பின் கஜானாவோ காலியாக இருந்தது. அதே சமயம் அக்பரிடம் ஒரு பெரிய இராணுவம், மற்றும் நிறைய செல்வம் இருந்தது. இருப்பினும், மஹாராணா பிரதாப், கவனத்தை சிதறடிக்கவோ அல்லது மனம் தளரவோ இல்லை.*

*மகாராணா பிரதாப்பின் ஒரே கவலை, முகலாயர்களின் பிடியில் இருந்து தனது தாய்நாட்டை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதுதான். ஒரு நாள், அவர் தனது நம்பிக்கைக்குரிய தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அவர்களிடம் "என் துணிச்சலான போர்வீரர் சகோதரர்களே, நமது  தாய்நாடு, இந்த புனித பூமியான மேவார், இன்னும் முகலாயர்களின் பிடியில் உள்ளது. சித்தோட்டை விடுவிக்கும் வரை பொன் வெள்ளிபாத்திரங்களில் உணவு உண்ண மாட்டேன், பட்டும் பஞ்சுமான மெத்தைகளில் உறங்க மாட்டேன், ஆடம்பரமான அரண்மனையில் வாழ மாட்டேன், விழாவோ கேளிக்கைகளோ கொண்டாடமாட்டேன், என் மீசையை முறுக்கிக்கொள்ள மாட்டேன்" உறுதிமொழி ஏற்று, தனது தலைவர்களின் ஆதரவை கேட்டுக்கொண்டார்.  அனைத்து தலைவர்களும் தங்கள் அரசரின்*

சத்தியத்தால் ஈர்க்கப்பட்டனர், மேலும் அவர்களும் தங்களுடைய கடைசி துளி இரத்தம் வரை, சித்தோட்டை விடுவிக்கவும், முகலாயர்களுடன் போரிடுவதில் அவருடன் சேரவும் ராணா பிரதாப் சிங்குக்கு உதவுவதாக அவருக்கு உறுதியளித்தனர்.

**ஹல்திகாடி போர்: உச்சப் போராளி 'மஹாராணா பிரதாப்'**

அக்பர் மகாராணா பிரதாப்பை தனது பிடியின் கீழ் கொண்டு வர தன்னால் இயன்றவரை முயற்சி செய்தார். ஆனால், அனைத்தும் வீண். மகாராணா பிரதாப்புடன் எந்த சமரசமும் செய்து கொள்ள முடியாததால் கோபமடைந்த அக்பர், போரை அறிவித்தார். மகாராணா பிரதாப்பும் ஆயத்தப் பணிகளைத் தொடங்கினார். அணுகுவதற்கு கடினமாக இருந்த ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள கும்பல் காட்டுக்கு தனது தலைநகரை மாற்றினார். மகாராணா பிரதாப் பழங்குடி மக்களையும் காடுகளில் வசிக்கும் மக்களையும் தனது படையில் சேர்த்தார். இந்த மக்களுக்கு போர் புரிந்த அனுபவம் இல்லாததால் பிரதாப் அவர்களுக்கு போர் பயிற்சி அளித்தார். மேவாரின் சுதந்திரத்திற்காக அனைத்து ராஜபுத்திர தலைவர்களும் ஒரே கொடியின் கீழ் வருமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

20,000 வீரர்களைக் கொண்ட மகாராணா பிரதாப்பின் படை, ஹல்தி காடியில் அக்பரின் 80,000 வீரர்களைச் சந்தித்தது. மகாராணா பிரதாப்பும் அவரது வீரர்களும் இந்தப் போரில் பெரும் வீரத்தை வெளிப்படுத்தினர். வாள்வீச்சினால் மூன்றும், ஈட்டியினால் மூன்றும், துப்பாக்கியினால் ஒன்றுமாக, பிரதாப்பின் உடலில் 7 பெரும் காயங்கள் ஏற்பட்டன. இருப்பினும் போர் செய்து கொண்டிருந்த பிரதாப், இறுதியில்

*அவரின் போர் தலைவர்களின் வலியுறுத்தலின் காரணமாக பின் வாங்க வேண்டியிருந்தது.*

*ஹல்திகாட் போரில் பிரதாப்பின் குதிரை சேதக்கும் பலத்த காயம் அடைந்தது. ஆனால், தனது எஜமானரின் உயிரைக் காப்பாற்ற, அது ஒரு பெரிய ஓடையை ஒரே தாவலில் தாண்டியது. ஓடையைக் கடந்தவுடன், 'சேதக்' கீழே விழுந்து இறந்தது. இந்த நேரத்தில், அவரது பிரிந்த சகோதரர் சக்தி சிங் தோன்றி ராணாவின் உயிரைக் காப்பாற்றினார்.*

*தனது உயிரைப் பணயம் வைத்து ராணா பிரதாப்பைக் காப்பாற்றியதால், சேதக் அழியாத புகழை அடைந்தது. பின்னர், சேதக்கிற்காக அது மரணமுற்ற அதே இடத்தில் ஒரு கல்லறையை அதன்நினைவாக பிரதாப் அமைத்தார்.*

*6 மாதங்கள் போராடிய பின்னரும், அக்பரால் மகாராணா பிரதாப்பை தோற்கடிக்க முடியாமல் தில்லிக்குத் திரும்பினார். இதன் பின்னாரும், 27 ஆண்டுகள் அக்பருக்கும் பிரதாப்பிற்கும் இடையில் போர் தொடர்ந்தது.*

***ஹல்திகாடி போர்ரின் பிறகு மகாராணா பிரதாப்பின் வாழ்க்கை:***
*மஹாராணா பிரதாப் காடுகளிலும், மலைகளின் பள்ளத்தாக்குகளிலும் அலையும் போதும் தன் குடும்பத்தை தன்னுடன் அழைத்துச் செல்வார். எதிரிகள் எந்த நேரத்திலும் எங்கிருந்தும் தாக்கும் அபாயம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். பல நேரங்களில், அவர்கள் உணவின்றி தவிக்க வேண்டியிருந்தது. எதிரிகளின் வருகையைப் பற்றிய தகவலைப்*

பெற்ற அவர்கள் உணவை விட்டுவிட்டு உடனடியாக வேறு இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது.
ஒருமுறை மகாராணி காட்டில் 'பக்ரிஸ் (இந்திய ரொட்டி)' வறுத்துக்கொண்டிருந்தார்; அவர்களின் பங்கை சாப்பிட்ட பிறகு, அவள் தனது மகளிடம் இரவு உணவிற்கு எஞ்சியிருந்த 'பக்ரி'யை வைத்திருக்கச் சொன்னாள், ஆனால் அந்த நேரத்தில், ஒரு காட்டுப் பூனை தாக்கி அவள் கையில் இருந்து 'பக்ரி' துண்டை கவ்விக்கொண்டு சென்றது.

தனது உணவை இழந்ததால் இளவரசி அழுதுகொண்டிருந்ததை கண்ட ராணா பிரதாப், தனது முக்காளும் இவ்வாறு தானே உணவின்றி பசியிலும் தாக்கதிலியும் தவிப்பர் என்று உணர்ந்தார்.

லைபாயும் மனநிலையில் அக்பருடன் போர் நிறுத்தம் செய்ய அக்பருக்கு சமாதான ஓலை ஒன்றை அனுப்பினார். மகாராணா பிரதாப்பின் அபிமானியாக இருந்த அக்பரின் அரசவையைச் சேர்ந்த பிருதிவிராய் என்ற கவிஞர், அவருக்கு ராஜஸ்தானி மொழியில் கவிதை வடிவில் ஒரு நீண்ட கடிதம் எழுதி, அவரது மன உறுதியை உயர்த்தி, அக்பருடன் போர் நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தடுத்தார்.

அந்த கடிதத்தினால், ராணா பிரதாப்பின் மனம் அமைதியாகவும், நிலையாகவும் மாறியது. அக்பரிடம் சரணடையும் எண்ணத்தை கைவிட்டு, மாறாக, மேலும் தீவிரத்துடன் தனது படையை பலப்படுத்த ஆரம்பித்து, மீண்டும் தனது இலக்கை நிறைவேற்றுவதில் மூழ்கினார்.

*மேவரின் அமைச்சர் பாமாஷா மகாராணா தன் செல்வம் அனைத்தையும் பிரதாப்பிற்கு வழங்கினார். மேலும், பல வருடங்களாக ஒதுங்கி இருந்த ராஜபுத்திர அரசர்கள் பணத்தினாலும் படையினாலும் பிரதாப்பிற்கு உதவ முன்வந்தனர். ஹல்தி காடி போரில் பிரதாப்புடன் மீட்டும் இணைந்த சகோதரன் சக்தி சிங்கும் நிதி திரட்டி அனுப்பினார். அதே நேரத்தில் பிரதாப்பின் அருமை மகன் அமர் சிங்கும் படை நடத்தி செல்லும் பிராயத்தை அடைந்திருந்தான்.*

*புத்தம் பலம் கொண்ட பிரதாப், இழந்த நகரங்களை ஒவ்வொன்றாக ஒவ்வொன்றாக மீட்டெடுத்தார். இவ்வாறு, மகாராணா பிரதாப் 32 கோட்டைகளை கைப்பற்றினார். சித்தோட்டை அடுத்த குறியாக வைத்திருந்த நிலையில், மகாராணா பிரதாப் நோய்வாய்ப்பட்டார்.*

***மகாராணா பிரதாப்பின் கடைசி ஆசை:***
*சித்தோட்டை விடுவிப்பதாகச் செய்த சபதம் இன்னும் நிறைவேறாததால் மகாராணா பிரதாப் இறக்கும் நேரத்திலும் புல்லால் செய்யப்பட்ட படுக்கையில் தான் படுத்திருந்தார். கடைசி நேரத்தில், தன் மகன் அமர்சிங்கின் கையைப் பிடித்து, சித்தோட்டை விடுவிக்கும் பொறுப்பை, தன் மகனிடம் ஒப்படைத்துவிட்டு, 1597ஆம் ஆண்டு, ஜனவரி 29 ஆம் தேதி, சாவந்த் என்னும் இடத்தில் நிம்மதியாக இறந்தார்.*

***மகாராணா பிரதாப்பின் நற்பண்பு:***
*ஹல்திகாடி போருக்கு முன், மான்சிங் கச்ச்வஹா எஞ்சி இருந்த ஒரு சில நூற்றுக்கணக்கான எதிரிகளைத் தேடிக் கொண்டிருந்தார். பிரதாபின்*

ஒற்றர்கள் அந்த முகாமிலிருந்து ஒரு சில கிலோ மீட்டர்கள் தொலைவில் அவருக்கு செய்திகளை தெரிவித்தனர். பிரதாபின் சில தலைவர்கள் அத்தகைய நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மான் சிங்கைத் தாக்கிக் கொல்ல வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். பிரதாப் மறுப்புரைத்தார், அவ்வகையில் தனது நேர்மை உணர்வை எடுத்துக் காட்டினார்.

மற்றுமொரு சம்பவத்தில், அப்துல் ரஹீம் கான்-இ-கானா என்னும் முகலாய அதிகாரியின் பெண்மணிகள், பிரதாபின் மகன் அமர்சிங் வசம் அகப்பட்டுக்கொண்டனர். அந்த சரியான நேரத்தில், கான்-இ-கானா பிரதாப்பை நோக்கி முன்னேறிக்கொண்டு இருந்தார் மற்றும் செர்பூரில் முகாமிட்டு இருந்தார். பிரதாப்பை நேரடியாகத் தாக்க முன்னேற்பாடுகள் செய்து கொண்டு இருந்தார். இதையெல்லாம் பொருட்படுத்தாமல், பிரதாப் தனது மகன் அமர்சிங்கை அந்த முகலாயப் பெண்மணிகளைப் பத்திரமாக அவர்களது முகாமில் கொண்டு சேர்க்குமாறு கட்டளை இட்டார். கான்-இ-கானா இந்த நிகழ்ச்சியால் வெகுவாகப் பாதிப்படைந்தார் மேலும் ஒரு வீரப் பெருந்தகைமையாளர் ஆன பிரதாப்பை எதிர்த்து நிற்க மறுத்துவிட்டார். இந்த நிகழ்ச்சியில் மூலம் பிரதாப் தனது யுத்த தர்மத்தையும், உயர் கொள்கைகள் உணர்வை எடுத்துக் காட்டினார்.

**மகாராணா பிரதாப்பின் நினைவுச்சின்னங்கள்:**

மகாராணா பிரதாப் இந்தியாவில் மிகுந்த உயர்வான மதிப்பு கொண்டவராகவும் தேசப்பற்றின் முன்மாதிரியாகவும் சித்திரிக்கப்பட்டு கொண்டு வரப்படுகிறார்.

மகாராணா பிரதாப்புக்கு அர்ப்பணிக்கப்பட்ட வரலாற்று தளம் ஒன்று, உதய்பூரில் உள்ள மோதி மக்ரியின் (அல்லது பேர்ல் மலையின்) உச்சியில் அமைந்துள்ளது. இது ராணா பகவத் சிங் மேவார் என்பவரால் கட்டப்பட்டது.

மகாராணா பிரதாப் நினைவகம் என்ற பெயருடைய இவ்விடத்தில், மகாராணா பிரதாப் அவரின் குதிரையான ‘சேதக்’ மீது அமர்ந்துள்ளது போல்  இருக்கும் வெண்கலச் சிலை ஒன்று உள்ளது.

பிரதாபின் நினைவாக இந்திய அரசு தபால் முத்திரைகள்(1967, 1998) மற்றும் நாணயங்கள்(2003) வெளியிட்டு பிரதாப்பை கௌரவப்படுத்தியது.

புது டெல்லியில் பாராளுமன்ற இல்லத்தின் முன்னால் ஆகஸ்ட் 21, 2007இல் மகாராணா பிரதாப்பை நினைவு கூறும் வகையில் மகாராணா பிரதாப்  சேதக் மீது அமர்ந்த மாறு ஒரு சிலையை நிறுவித்தது இந்திய அரசு. இச்சிலையில், பிரதாப்பின் படைத்தலைவர்களானா ஜல பீடா, பிலு ராஜா (மலைவாழ் மக்களின் முதல்வர்), பாமா ஷா, ஹக்கீம் கான் சூர் ஆகியோரும் இருக்கின்றனர்.

மேலும், மகாராணா பிரதாப்பின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் குறித்து பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், புத்தகங்கள் மற்றும் நாடகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**மகாராணா பிரதாப்பை பற்றிய மற்ற விவரங்கள்:**

1. மகாராணா பிரதாப் ஏழு அடி ஐந்து அங்குலம் உயரமும் 110 கிலோ எடையும் கொண்டிருந்தார். அவர் சுமார் 300 கிலோ எடையை சுமந்தார். அதில் ஒரு ஈட்டி, இரண்டு வாள்கள், அவரது கவசம் மற்றும் அவரது சொந்த எடை ஆகியவை அடங்கும்.
2. மகாராணா பிரதாப்பிற்கு பதினொரு மனைவிகள், ஐந்து மகள்கள் மற்றும் பதினேழு மகன்கள் இருந்தனர்.
3. மகாராணா பிரதாப் சேதக்கை தவிர ராம்பிரசாத் என்ற யானையையும் வைத்திருந்தார். முகலாய இராணுவத்தின் இரண்டு போர் யானைகளைக் அது கொன்ற பிறகு, அக்பர் ராம்பிரசாத்தை சிறையில் அடைத்தார். அதன் முதலாளி விசுவாசதினால் எதையும் உண்ணாமலும் அருந்தாமலும், 18 நாட்களில் தன் உயிரை இழந்தது
4. சாவந்தில் உள்ள மகாராணா பிரதாப்பின் அவை பல கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு அடைக்கலம் அளித்தது. சாவந்த் கலைப் பள்ளி ராணா பிரதாப் ஆட்சியின் போது உருவாக்கப்பட்டது.
5. அக்பர் தலைமையிலான முகலாயப் படைகளிடம் அவர் சரணடையாததால், மகாராணா பிரதாப் பெரும்பாலும் ‘இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரராக’ கருதப்படுகிறார்.

**முடிவுரை:**

*தன் இன்னுயிரை தியாகம் செய்து இந்நாட்டின் தர்மத்தையும், பண்பாட்டையும், சுதந்திரத்தையும் காத்த வீரம் மிக்க மன்னர்களின் பட்டியலில், மகாராணா பிரதாப்பின் பெயர் தங்கத்தால் பொறிக்கப்பட்டுள்ளது.*

*இவருக்கு வரலாற்றில் எந்த ஒப்பீடும் இல்லை. பப்பா ராவல், ராணா ஹமீர், ராணா சங் போன்ற பல துணிச்சலான வீரர்கள் மேவார் சிசோடியா குடும்பத்தில் பிறந்து 'ராணா' பட்டம் பெற்றாலும், 'மகாராணா' என்ற பட்டம் பிரதாப் சிங்குக்கு மட்டுமே வழங்கப்பட்டது.*

*வீரம், தைரியம் தியாகம் மற்றும் தேச பற்று போன்ற குணங்களுக்கு சின்னமாகவும் சுதந்திரத்தின் மற்றொரு பெயராகவும் இருக்கும் இவரின் புனித நினைவு என்றும் ராஜஸ்தான மக்களின் மனதிலும் இந்திய மண்ணிலும் நீட்டி நிலைத்திருக்கும்!*